# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC. 73/2020 | Village | : | |
| Prosecution Witness | : | PW - 17 | Taluk | : | |
| Name | : | ரமேஷ்குமார் | Age | : | 45 |
| Father Name | : | மகாலிங்கம் | Occupation | | |

***Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 31.01.2025***

***Accused A1, A2, A5, A6, A9, A10, A11 present. Accused A3, A4, A7, A8 absent. U/Sec. 355 BNSS petition filed and allowed.***

**அரசு தரப்பில் முதல் விசாரணை** :-

நான் மணலூரில் குடியிருந்து ஓட்டுநர் வேலை செய்து வருகிறேன். இறந்து போன பிராசாந்தை தெரியும். 1ம் எதிரியின் மூத்த மகளை தெரியும். 1 மற்றும் 11ம் எதிரியை தெரியும். மற்றவர்களை தெரியாது. முருகராஜ் என்பவரின் மகளை பிரசாந்த் என்பவர் காதலித்து இருவரும் ஓடிபோய்விட்டதாக சொன்னார்கள். 2016ம் வருடம் இந்த சம்பவம் நடந்தது. 1ம் எதிரி முருகராஜ்ம் அவரது உறவினர்களும் மகளை தேடிக்கொண்டு பிரசாந்த் என்பவர் வீட்டிற்கு வந்தார்கள். பிரசாந்தின் அம்மா மற்றும் தம்பி ஆகியோர்கள் இவர்கள் விசாரித்ததும் ஊருக்கு போய்விட்டார்கள். 2 நாள் கழித்து பிரசாந்த்தை அடித்து நடுக்காவேரி ஆற்றில் கொன்றுவிட்டதாக ஊர்மக்கள் சொன்னார்கள். யார் கொன்றார்கள் என்று தெரியவில்லை. அய்யம்பேட்டை போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசுதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

இறந்துபோன பிரசாந்தும் 1ம் எதிரியின் மூத்த மகளும் ஊரில் காதலித்துக்கொண்டிருந்தது எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு பயந்துகொண்டு காங்கேயம்பேட்டைக்கு பிரசாந்தும் 1ம் எதிரியின் மூத்த மகளும் போய்விட்டார்கள் என்றால் சரிதான். காங்கேயம்பேட்டைக்கு அவர்கள் போனவுடன் எதிரிகள் பிரசாந்த் வீட்டிற்கு சென்று பிரசாந்தின் அம்மாவையும் அண்ணனையும் மிரட்டினார்கள் என்றால் சரியல்ல. ஆனால் அவர்கள் காங்கேயம்பேட்டைக்கு சென்றுவிட்டார்கள் என்றால் சரிதான். தன் மகளை காணவில்லை என்று 1ம் எதிரியின் மனைவி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால் சரிதான். எதிரிகள் பிரசாந்தையும் அவர்கள் குடும்பத்தையும் இத்தோடு ஒழித்து கட்டிவிடவேண்டும் என்று அரிவாளுடன் திரிந்தார்கள் என்றுகூறியுள்ளேன் என்றால் சரியல்ல. 2 நாட்கள் கழித்து பணவெளி வெட்டாறில் பிரசாந்த் அடித்து கொன்றுவிட்டதாக

போலிசாரிடம் சொன்னேன் என்றால் சரியல்ல. போலிசார் விசாரித்த போது கூறிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>**

1ம் எதிரியின் மகள் எங்கள் ஊரை சேர்ந்தவர் என்றால் சரிதான். அவருக்கு சம்பவத்திற்கு பிறகு வேறு ஒருவருடன் திருமணமாகி குழந்தை உள்ளது என்றால் சரிதான். போலிசார் விசாரணைக்கு எப்போது வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. 1 மற்றும் 11 எதிரிகள் ஊர்காரர்கள் என்பதால் எனக்கு தெரியும். நான் பிரசாந்த் இறந்ததாக கேள்விப்பட்டேன். எந்த இடத்தில் இறந்தார் என்று தெரியாது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர். (மு.கூ.பொ)